ORIGINAL ARTICLE

# கொரோனா தொற்றுக் காலத்தில் தினக்கூலியாளர்களின் நிலை: கொழும்பு - 12 புதுக்கடை பிரதேசத்தை மையப்படுத்திய சமூகவியல் ஆய்வு [KORŌṈĀ TORṞU KĀLATTIL TIṈAKKŪLIYĀḶARKAḶIṈ NILAI: KOḺUMPU - 12 PUTUKKAṬAI PIRATĒCATTAI MAIYAPPAṬUTTIYA CAMŪKAVIYAL ĀYVU]

# DAILY WAGE WORKERS IN COVID-19 PANDEMIC PERIOD: A SOCIOLOGICAL RESEARCH BASED ON HULFTSDORF, COLOMBO-12

**எம்.ஏ.எப்f.அஷ்பா / M.A.F.Ashfa** [*1]
**எம்.ஜே.எப். ஸனா அன்ஜூம் / M.J.F. Sana Anjum** [2]
**அ. இஜாஸ் முஹம்மத் / A. Ijas Mohamed** [3]
**எம்.எம்.எப். அகீலா / M.M.F. Aqeela** [4]
**எம்.எஸ்.ஸூனூமி / M.S. Zunoomy** [5]

[1] Department of Islamic studies, South Eastern University Sri Lanka.
Email: ashfaansar6@gmail.com
[2] Department of Arabic Language, South Eastern University Sri Lanka.
Email: fathimasanaanjum@gmail.com
[3] Department of Arabic Language, South Eastern University Sri Lanka.
Email: ijasajeen@gmail.com
[4] Department of Arabic Language, South Eastern University Sri Lanka.
Email: fathiakeela14@gmail.com
[5] Department of Arabic Language, South Eastern University Sri Lanka.
Email: zunoomyzain94@gmail.com

*Corresponding author

DOI: https://doi.org/10.33306/mjssh/163

## Abstract

The COVID-19 pandemic has gravely wounded the world economy with serious consequences impacting all communities and individuals. However, the rich and middle class can fill in their day to day needs, because of having enough money. At the same time, daily wage workers are facing difficulties to fill in their daily life needs in the current situation. According to this, the research aims to identify the economy level of daily wage workers of Hulftdorf, Colombo-12 during this

period. The primary data were collected from 54 daily wage workers though questionnaire and in-depth interview. The gathered data were discussed by mixed approach descriptive methodology. The findings of this research declare that urban daily wage workers face the many difficulties than rural daily wage workers, because of expensive and costly price of the essential commodities. At the other hand, due to lack of daily income, they do not save the money. Thus, they face economic problems in predicaments. They also get insufficient donation, aids and relief in this emergency situation.

**Keywords:** Corona Virus, Daily wage workers, Curfew, Hulftdorf, Colombo

**ஆய்வுச் சாரம்**

கொரோனா பரவலினால் முழு உலகமுமே ஸ்தம்பிதம் அடைந்திருக்கின்ற நிலையில், அங்கு வாழும் ஒவ்வொரு சமூகப் பிரிவினரும் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவார்கள் என்பது யதார்த்தமான விடயமாகும். எனினும், செல்வந்தர்களும், நடுத்தர வர்க்கத்தினரும் தனது அன்றாட தேவையை நிறைவேற்றிக் கொள்ள முடியுமான வழிவகைகளைச் செய்துகொள்ள முடிகிறது. ஏனெனில் இவர்களிடத்தில் பொருளாதாரம் தேவையான அளவு காணப்படுகின்றது. ஆனால், தினமும் கூலித் தொழில் செய்து அன்றாடத் தேவைகளை நிறைவு செய்பவர்கள் கொரோனா ஊரடங்கு காலப்பகுதியில் பல இடர்களை எதிர்நோக்கியிருந்திருப்பார்கள் என்பதை அனுமானமாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. கொரோனா காலத்தில் கொழும்பு புதுக்கடைப்பிரதேசத்தில் தினக்கூலியாளர்களின் பொருளாதார நிலையை அடையாளப்படுத்தும் நோக்கில் அப்பிரதேசத்தைச் சேர்ந்த 54 தினக்கூலியாளர்களிடம் வினாக்கொத்து மூலமும், ஆழமான கலந்துரையாடல் மூலமும் முதலாம் நிலைத்தரவுகள் பெறப்பட்டன. பெறப்பட்ட தரவுகள் தரம்சார், பண்புசார் ரீதியான விபரிப்பு ஆய்வு முறையியல் ஊடாக கலந்துரையாடப்பட்டுள்ளன. அவ்வாறே, வினாக்கொத்து மூலமான தரவுகளைப் பகுப்பாய்வு செய்ய எம்.எஸ்.எக்ஸல் பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாய்வின் கருதுகோளை உறுதிப்படுத்தும் வகையில் அதன் பெறுபேறுகள் கிடைக்கப்பெற்றிருப்பதை அவதானிக்க முடிகின்றது. இந்த வகையில், இலங்கையில் கொரோனா காலப்பகுதியில் தலைநகரான கொழும்பிலுள்ள புதுக்கடை பிரதேசத்தில் தினக்கூலி வேலை செய்பவர்களின் நிலையை இவ்வாய்வு அடையாளப்படுத்தி இருக்கின்றது. கிராமப்புறங்களில் வாழும் கூலித் தொழிலாளர்களை விட நகர்ப்புற கூலித் தொழிலாளர்கள் பல்வேறு சவால்களுக்குச் சாதாரண காலப்பகுதியில் எதிர்நோக்குவர். குறிப்பாக, அன்றாடப் பாவனைக்குத் தேவையான பொருட்களின் விலைகளும் அதிகமாக காணப்படுதல், வாழ்க்கைச் செலவு அதிகம் போன்ற பொருளாதார பிரச்சினைகளை எதிர்கொள்வர். இதன்போது, தின வேலையும் இல்லாமல் சேமிக்கும் வழமையும் இல்லாமல் ஆகின்ற போது, அவர்களின் தினசரி வாழ்வு அதிசிரமத்துடனேயே கடந்துசெல்லும். இதேநிலையை ஆய்வுக்குட்படுத்தப்பட்ட பிரதேசத்தில் வாழ்கின்ற தினக்கூலியாளர்கள் கொரோனா ஊரடங்கு காலப்பகுதியில் எதிர்நோக்கியுள்ளனர். அவ்வாறே, குடும்ப உதவிகள், அரசாங்க உதவிகள், நிறுவனங்களின் நன்கொடைகள் வழங்கப்பட்டாலும் அவற்றைப் பெறுவதில் சிரமத்தை எதிர்கொண்டுள்ளனர் என்பதுடன் அவை போதியளவு வழங்கப்படவில்லை என்பதை அவதானிக்க முடிகின்றது.

**கருச்சொற்கள்:** கொரோனா, தினக்கூலியாளர்கள், புதுக்கடை, கொழும்பு, ஊரடங்கு

This article is licensed under a Creative Commons Attribution-Non Commercial 4.0 International License

Received 1th May 2021, revised 8th June 2021, accepted 30th June 2021

**முன்னுரை**

சீனாவில் வுஹான் நகரில் கண்டறியப்பட்ட COVID-19 எனும் கொரோனா வைரஸானது மனிதர்களுக்கிடையில் தொற்றுகின்ற நோயாக 31 டிசம்பர் 2019 அன்று உலக சுகாதார அமைப்பினால் அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டது (Shahare, Burghate, & Niyaj, 2021)[1]. இது உலகவாழ் மக்களின் ஆரோக்கியத்திற்கும் பொருளாதாரத்திற்கும் அச்சுறுத்தலாக அமைந்தது (Titus, Leslie, Brundha & Jothi, 2020)[2]. அதேநேரம், பூகோள உலக கிராமத்தை (globalized world village) தனிமைப்படுத்தல் நிலைக்கு இட்டுச்சென்றது (Faculty of Humanities and Social Sciences, 2020)[3]. இதன்காரணமாக முடக்கநிலை, பயணக் கட்டுப்பாடு, வெளிநாட்டுப் பயணங்கள் போன்றன ஏற்பட்டு தொழில்வாழ்க்கை பெரிதும் பாதிப்புக்குள்ளாகின (UNHCR & IMPACT, 2021)[4].

உலகளாவிய ரீதியில் அமுலாக்கப்பட்ட முடக்கத்தினால் தொழிலில் இன்மையும், வருமானம் இன்மையும் பாரிய சவாலாக மாறியது. இதனால் மனிதர்களின் தொழில்வாழ்க்கையும், அன்றாட வாழ்க்கையும் சீர்குலைந்தன (Hewamanne, 2021)[5]. இந்த உலகளாவிய நெருக்கடியால், பல மில்லியன் மக்களின் ஆரோக்கியம், தொழில், வருமானம் ஆகியன பாரிய சவாலுக்கு உள்ளாகின (Saudi Arabia's G20 Presidency, 2020)[6].

கொரோனாத் தாக்கம் உலகம் முழுவதும் பரவி, இதுவரை 10.69 கோடிக்கும் மேற்பட்டவர்கள் இதனால் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தரவுகள் தெரிவிக்கின்றன. மேலும் உலகளவில் இதுவரை 2,335,623பேர் உயிரிழந்துள்ளதுடன் இலங்கையில் கொரோனா தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 709 ஆக (4.5.2021) அதிகரித்துள்ளது (news.lk, 2021)[7,8].

COVID-19 பரவல், நோயாளிகள் மரணவிகிதங்களையும் மாத்திரமல்லாமல் உலகெங்கிலும் ஏற்படுத்தியுள்ள பொருளாதார, கல்வி, அரசியல், சமூக பாதிப்புக்களானது அளவிட முடியாதவொன்றாக உள்ளது. இப்பாதிப்புக்களில் பல நாடுகள் சிக்கித் திணறி வருகின்றன. இதனால் பல நாடுகளின் பொருளாதாரம் மிகவும் வீழ்ச்சி அடைந்துள்ளது (Wimalaweera, 2020)[9].

கொரோனா வைரஸின் பரவலால் சீனாவின் பொருளாதாரமே முதன்முதலில் பாதிக்கப்பட்டது. ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் பொருளாதார பாதிப்புகள் பெருகத்துவங்கியபோது, உலகெங்கிலும் உள்ள நாடுகள் தமது சிக்கல்களைக் கட்டுப்படுத்த கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆரம்பித்தன. வணிக நிலையங்களும் அலுவலகங்களும் மூடப்பட்டுக் குடிமக்கள் தங்கள் வீடுகளில் இருந்து வெளிவரமுடியாத நிலை உருவாகி பல நாடுகளில் ஊரடங்கு உத்தரவு அகற்றப்படாமல் அமுலில் காணப்படுகின்றது. ஒவ்வொரு நாளும் விடியும் போது வாழ்க்கைமுறை மாற்றத்திற்குள்ளாகி வருகிறது. முன்னெப்போதும் இல்லாத அளவில் சாதாரண பொருளாதார நடவடிக்கைகள் கூட

சீர்குலைந்துள்ளன. உலகம் ஏற்கனவே மந்தநிலைக்குள் நுழைந்துவிட்டதாகப் பல பொருளாதார வல்லுநர்கள் நம்புகின்றனர். இதன் வீழ்ச்சி பல தலைமுறைகளுக்குப் பிறகு தொற்றுநோயினால் தோன்றியுள்ள மிகப்பெரிய அதிர்ச்சிகளில் ஒன்றாக கணிக்கப்படுகிறது (Pradas, 2020)[10].

அந்த வகையில் கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக இலங்கையின் பொருளாதாரம் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளதால், 2020ம் ஆண்டின் இறுதியில் நாட்டின் வறுமையானது 43.9 வீதமாக அதிகரிக்கும் என உலக வங்கி தெரிவித்துள்ளது. அத்துடன் இந்த ஆண்டு நாட்டின் பொருளாதார வளர்ச்சி வீதமானது மூன்று வீதத்தால் குறைவடையும் என உலக வங்கி மதிப்பிட்டுள்ளது. இந்த நிலைமை காரணமாக இலங்கையின் சிறிய மற்றும் மத்திய தர தொழிற்துறையினர் கடும் போராட்டத்தை எதிர்நோக்க நேரிடும். அத்துடன் கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக சமூக இடைவெளியை முன்னெடுத்துச் செல்ல எடுக்கப்படும் நடவடிக்கைகள் பொருளாதாரத்தில் நேரடியாகத் தாக்கத்தை ஏற்படுத்தும் எனவும் அறிவித்துள்ளது (உலகவங்கி, 2020)[11].

அவற்றிலும் முக்கியமாக ஒவ்வொரு நாளும் நாள் சம்பளம் பெறும் தினக்கூலியாளர்களின் நிலை மிகக்கவலைக்கிடமாகும். அவர்கள் தாங்கள் பெறும் சம்பளத்தை வைத்துத் திட்டமிட்டப்படி வாழ்க்கை நடத்தி வருபவர்கள். எவ்வித சேமிப்புக்களும் இல்லாதவர்கள். இவ்வாறான இக்கட்டான நிலைமைகளின் போது அவர்களின் ஒவ்வொரு நாளும் ஏதாவது ஒரு வகையில் செலவு அதிகரிக்க, வரவுகளை எதிர்பார்த்து விழிபிதுங்கி நிற்கும் சாமானி நிலையையே பெரும்பாலான குடும்பங்கள் அனுபவித்து வருகின்றன. அதிலும் இந்தக் கொரோனா நெருக்கடி, அதிகளவான அழுத்தத்தைத் கொடுத்து வருகின்றது. வருமானம் அப்படியே இருக்க அல்லது குறைந்து செல்ல அல்லது எவ்வித வருமானமும் பெறாமளிருக்க செலவீனங்க மாத்திரம் அதிகரித்துக்கொண்டே செல்கின்றது என்றே கூறலாம் (அனுதினன், 2020)[12].

தினக்கூலி பெறும் குடும்பங்களின் நிலையானது கொரோனா தொற்று காலப்பகுதியில் மிகவும் கவலைகிடமானதாகவும் கடன்வாங்கி வாழ்க்கை வட்டம் நகர்கிறது என்பதை ஆய்வுப் பிரதேசத்தில் அவதானிக்க முடிகின்றது.

**ஆய்வுப் பிரச்சினை**

மனிதனின் அடிப்படைத் தேவைகளாக உணவு, உடை, உறையுள் ஆகியன காணப்படுகின்றன. மனிதனின் அடிப்படைத் தேவைகளும் சரி, அவையன்றிய ஏனைய தேவைகளும் சரி அவற்றை அவன் பெற்றுக்கொள்ள வருமானம் இன்றியமையாத ஒன்றாகும். அதனாலேயே தனக்கான வருமானத்தைப் பெற அயராது உழைக்கிறான். அந்த வகையில், சிலருக்குத் தமது தேவைக்கு மிஞ்சிய வருமானமும் இன்னும் சிலருக்குத் தேவைக்கேற்ற வருமானமும் இன்னும் சிலருக்கோ வருமானத்துக்கு மிஞ்சிய தேவைகளும் காணப்படுகின்றன. முதல் இரு சாராரும் நாட்டில் எந்த நிலை ஏற்பட்டாலும் தமது அன்றாட தேவையைச் சரிவர நிறைவேற்றிக் கொள்வார்கள். ஆனால், மூன்றாம் சாராராக இனங்காணப்பட்டவர்கள் தினக்கூலியாளர்கள் ஆவர். அதனால் தான் தினக்கூலியாளர்கள் தமக்கு என்ன கஷ்ட, நஷ்டங்கள் வந்தாலும் தமது தொழிலுக்குச் சென்று முடிந்ததை வருமானமாக ஈட்டி வருகின்றனர். இஃது இவ்வாறிருக்க, 2019 ஆம் ஆண்டு சீனாவில் ஆரம்பித்த கொவிட் 19 வைரஸ் 2020 ஆம் ஆண்டு ஆரம்ப பகுதிகளிலேயே முழு

உலகையும் ஆட்கொண்டது. அதனைக் கட்டுப்படுத்த இலங்கை அரசாங்கமும் எல்லா நாடுகளைப் போலவும் முடக்க நிலையையும் ஊரடங்கு சட்டத்தையும் அமுல்படுத்தியது.

இக்காலகட்டத்தில் தினக்கூலித் தொழில் புரிவோர் தங்கள் அன்றாட செலவுகளை நிறைவேற்றிக் கொள்வதில் பல சிரமங்களை எதிர்கொண்டனர் என்பது நிதர்சனமாகும். அதிலும் குறிப்பாக, நகர்ப்புறத்தில் வாழ்கின்ற தினக்கூலி வேலை செய்பவர்களின் நிலை ஏனையோர்களை விடவும் சிரத்தைக்குரிய விடயமாகும். இந்தவகையில், கொழும்பு-12 புதுக்கடைப் பிரதேசத்தில் வாழ்கின்ற தினக்கூலியாளர்களின் நிலையை ஆய்வுக்கு உட்படுத்துவதாக இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

## ஆய்வு நோக்கம்

குறித்த ஆய்வுப்பிரதேசத்தில் வாழ்கின்ற தினக்கூலியாளர்களின் பொருளாதார நிலையை அடையாளப்படுத்துதல்.

## ஆய்வு முறையியல்

இவ்வாய்வானது தரம்சார், பண்புசார் ரீதியான (Mixed Approach) விபரிப்பு ஆய்வு முறையியலை (Descriptive Methodology) பயன்படுத்தியுள்ளது. இவ்வாய்வுக்கு தரவு சேகரிப்பதற்காக முதலாம், இரண்டாம் நிலை தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆய்வுப் பிரதேசத்தில் வாழ்கின்ற 60 தினக்கூலி தொழில்புரிகின்றவர்களிடமிருந்து வினாக்கொத்து மற்றும் ஆழமான கலந்துரையாடல் மூலம் முதலாம் நிலைத்தரவுகள் பெறப்பட்டன. இரண்டாம் நிலை தரவுகள் ஆய்வுக்கட்டுரைகள், இணையத்தளங்கள், பத்திரிகை ஆக்கங்கள், சஞ்சிகை கட்டுரைகள் போன்றவற்றில் இருந்து பெறப்பட்டன. கிடைக்கப்பெற்ற தரவுகள் அனைத்தும் ஒழுங்கமைக்கப்பட்டு எம்.எஸ்.எக்ஸல் மூலம் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டன.


## கலந்துரையாடல்

ஒரு நாட்டின் வளர்ச்சியில் பல விடயங்கள் தாக்கம் செலுத்துகின்றன. அதில் மிக முக்கியமான ஒன்றாகத் திகழ்வது அங்குள்ள பொருளாதாரம் ஆகும். மனிதனின் அன்றாட தேவைகளைப் பூர்த்தி செய்ய பொருளாதார தேவை இன்றியமையாதது. பொருளாதார வளர்ச்சி மனித வாழ்வில் முன்னேற்றங்களை உண்டுபண்ணுவது போல அதன் வீழ்ச்சியும் அவனில் எதிர்த் தாக்கங்களை ஏற்படுத்தும். அந்த வகையில், 2019 ஆம் ஆண்டு முழு உலகையும் ஆட்கொண்ட கொரோனா வைரஸ் உலகின் பல விடயங்களில் பாதிப்புச் செலுத்தியது. அதில் மிக முக்கியமான ஒன்றாகத் திகழ்வது பொருளாதாரமாகும். இதில் இலங்கைப் பொருளாதாரமும் ஸ்தம்பித்து போனது. குறிப்பாக முடக்க நிலை மேற்கொள்ளப்பட்டதால் தினக்கூலி பெறும் தொழிலாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். இவர்கள் சாதாரணமான நாட்களிலேயே தமது வருமானத்தைத் தமது தேவைக்கும் குறைவாகவே பெறுகின்றனர். இந்தவகையில், தினக்கூலியாளர்கள் கொரோனா காலப்பகுதியில் தமக்கான பணவசதிகளைப் பெற்றுக்கொண்டு தமது தேவைகளை எப்படி நிவர்த்தி செய்து கொண்டார்கள் என்பதைக் கொழும்பு புதுக்கடை பிரதேசத்தை மையப்படுத்தி அவர்களில் 54 குடும்பங்களை எழுமாறாகத்

தெரிவு செய்து, அவர்களிடம் பெறப்பட்ட தரவுகளை இவ்வாய்வின் கலந்துரையாடலில் பின்வருமாறு நோக்கலாம்.

அதனடிப்படையில் புதுக்கடை பிரதேசத்தை சேர்ந்த மக்கள் 94% ஆனவர்களும் அதனை அண்டிய பிரதேசத்தில் வாழும் மக்கள் அதாவது கிரேன்ட்பாஸ் மற்றும் வத்தளை பகுதிகளில் வாழும் குடும்பங்களில் 6% ஆனவர்களும் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டார்கள். சாரதியாக இருப்பதையும், கூலித்தொழில் செய்வதையுமே அப்பிரதேசங்களில் வாழும் மக்களில் அதிகமானவர்களின் தினக்கூலிக்குரிய தொழிலாக மேற்கொண்டு வருகின்றனர். ஒரு சாதாரண மனிதனின் அன்றாடத் தேவையாக இருக்கும் மூவேளை உணவைப் பெற்றுக்கொள்வதற்கே இன்று கணிசமான அளவில் பணம் தேவைப்படுகிறது. அவ்வாறிருக்கையில், தினக்கூலி பெற்று வாழ்க்கை நடத்தி வந்த இவர்கள் திடீரென முடக்க நிலையை அமுல்படுத்தியவுடன் தமது அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ள மிகவும் சிரமப்பட்டிருக்கிறார்கள். அத்தோடு எழுதுவினைஞர், முச்சக்கரவண்டி சாரதி மற்றும் வீடுகளுக்குச் சென்று உதவிகளைச் செய்து கொடுத்து அன்றாடம் சிறியதொரு சம்பளம் பெற்று வருபவர்கள், தொலைபேசி கடைகளில் பணிபுரிதல், மேசன் வேலைகள் செய்தல் போன்ற தொழில்களை மேற்கொள்ளும் தினக்கூலியாளர்களாக இவர்கள் அடையாளப்படுத்தப் பட்டார்கள்.

மேலே குறிப்பிடப்பட்ட தொழில்களைச் செய்யும் தினக்கூலியாளர்கள் கொரோனாவுக்கு முன் தமது வருமானம் எப்படியாக இருந்தது என்பது பற்றி வினவப்பட்ட போது, அதற்கு அவர்களில் 50% ஆனோர் 500/= - 1000/= வரையிலான பணத்தொகையை மட்டுமே பெற்றுள்ளனர். 33% ஆனோர் 1000/= - 1500/= வரையிலான பணத்தொகையைப் பெற்றுவந்துள்ளனர். 11% ஆனோர் 200/= - 500/= வரையிலான வருமானத்தையே பெற்றுள்ளனர். மீதமுள்ள 6% ஆனோர் எவ்விதமான வருமானத்தையும் பெற்றுக்கொள்ளவில்லை. அதனையே கீழ்வரும் படம் 1 தெளிவுபடுத்துகிறது.





*படம் 1* கொரோனா தொற்றுக்கு முன்னர் பெற்ற ஒரு நாள் சம்பளம்

தினக்கூலி பெற்று வாழும் இம்மக்களின் கருத்துப்படி இவர்களின் அதிகூடிய தினக்கூலியின் பெறுமானம் 1500/=ஆக காணப்படுகின்றது. அவர்களின் அன்றாட வாழ்வின் அத்தியவசியத் தேவைகளைத் தாண்டிய இதர தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வது கேள்விக்குரிய விடயமாகவே இவர்களின் வாழ்வில் உள்ளது. அதாவது நீர், மின்சார கட்டணங்களைச் செலுத்துதல், மருத்துவ செலவுகள் போன்றவற்றைச் சரியான முறையில்


மேற்கொள்வது அவர்களுக்குச் சிரமமான ஒரு விடயமாகக் காணப்படுகின்றது. இந்த வகையில், கொரோனா காலப்பகுதியில் வருமானமே இன்றிய செலவுகளை மேற்கொண்டது இவர்களுக்கு மிகுந்த ஒரு சவாலாகவே இருந்ததாகத் தெரிவித்தனர்.

அவர்களிடம் கொரோனா காலப்பிரிவில் தங்களுக்குக் கிடைக்கப்பெற்ற வருமானம் பற்றி வினவப்பட்ட போது, அவர்களில் 55.6% ஆனோர் தமக்கு எதுவிதமான வருமானங்களுமே கிடைக்கப்பெறவில்லை என்றே பதிலளித்தார்கள். ஏனையவர்களில் 300/= - 500/=வரையான வருமானம் பெற்றவர்கள் 24.1% ஆனோரும் 100/= - 300/= வரையான வருமானம் பெற்றவர்கள் 13% ஆனோரும் இனங்காணப்பட்டனர். ஏனையோர் 500/= - 1000/= வரையிலான வருமானத்தைப் பெற்றுக்கொண்டனர். அதனைப் பின்வரும் படம் 2 விபரிக்கின்றது.



படம் 2. கொரோனா காலப்பகுதியில் பெற்ற ஒரு நாள் சம்பளம்

*படம் 2* இன் படி, எந்தவித வருமானமும் கிடைக்கப்பெறாதவர்களே அதிகமாக இக்காலப்பகுதியில் இருந்துள்ளனர். வருமானம் கிடைக்கப் பெறும் மக்களுக்கும் மிகச்சிறிய ஒரு தொகை கிடைக்கப்பெற்றதையே காணமுடிகிறது. கொரோனா காலப்பகுதியில் ஊரடங்கு அமுலில் இருக்கும்போது எல்லா வீடுகளிலும் குடும்ப உறுப்பினர்கள் அனைவருமே ஒன்றாக இருந்தனர். அச்சந்தர்ப்பத்தில் அவர்களுக்கு வருமானமின்றிய செலவு பாரிய கஷ்டத்தையே எதிர்நோக்க வைத்துள்ளது. வருமானத்தை அன்றாடம் சிறுதொகையையேனும் பெற்றுக்கொண்டவர்கள் தம்மால் முடிந்ததை செய்தாலும் வருமானமே கிடைக்கப்பெறாதவர்களின் நிலை மிகவும் சிரமமான ஒன்றாகவே காணப்பட்டதாகக் கூறினர். இதன்போது, 85% ஆனோருக்கு இக்காலப்பகுதியில் தாங்கள் பெற்ற வருமானம் போதியளவாக இருக்கவில்லை எனவும் 15% மானவர்களுக்கே சற்று போதியளவாக காணப்பட்டதாக தெரிவித்தனர். இதனை படம் 3 விபரிக்கின்றது.





படம் 3. வருமானம் போதுமானது

இந்த வகையில், பெரும்பாலான மக்கள் தமக்குரிய வருமானம் போதாமையாக இருந்ததாகக் குறிப்பிட்டிருந்தது யதார்த்தமான ஒன்றே. அன்றாடம் கூலியைப் பெற்றாலே தமக்குரிய தேவைகளை நிவர்த்தி செய்ய சிரமப்படுபவர்கள் வருமானமே கிடைக்காதிருப்பின் தமக்கான செலவுகளை மேற்கொள்வதில் மிகவுமே சிரமங்கொண்டிருப்பார்கள். எனினும், இக்காலப் பகுதியில் அன்றாடத் தேவைகளை நிவர்த்திப்பதற்காக அவர்கள் மேற்கொண்ட வழிகளைப் பற்றி வினவிய போது, அவர்களில் பெரும்பாலனவர்கள் தமது உறவினர்களிடமும் அயலவர்களிடமும் கடன் பெற்றுக்கொண்டதாகவே குறிப்பிட்டிருந்தார்கள். ஒரு சிலர் மாத்திரம் தமது அயல் வீட்டார்கள் தேவையான உதவிகளைச் செய்ததாக குறிப்பிட்டிருந்தார்கள். இன்னும் சிலர் தமது நகைகளை அடகு வைத்துப் பணம் பெற்றிருக்கிறார்கள். இன்னும் சிலர் ஒரு நாளைக்கு ஒரு வேளை உணவு சாப்பிட்டுள்ளார்கள் (மூலம்: கலந்துரையாடல், 2021). மறுபுறம், கடன் பெற்ற மக்கள் அதனைக் குறித்த ஒரு தவணையில் மீள கொடுக்க வேண்டும். அதேநேரம் அன்றாடம் வருமானத்தைப் பெற்று தமது தேவைகளைப் பூரத்தி செய்து கொள்வதா? அல்லது அவர்கள் பெற்றுக்கொண்ட கடனை மீள செலுத்துவதா? என்ற ஒரு பிரச்சினையும் புதிதாக எழுகிறது. எது எப்படியாயினும் தினக்கூலி பெற்று வாழும் மக்கள் ஊரடங்கு அமுல் படுத்தப்பட்டிருந்த கொரோனா காலத்தில் தமது தேவைகளுகேற்ற வருமானத்தைப் பெறாமல் மிகுந்த சிரமங்களை எதிர்நோக்கியதாக கலந்துரையாடலின் போது தெரிவித்தனர்.


அலுவலகங்களும், கடைகளும் மூடப்பட்டு பொதுமக்கள் தத்தமது வீடுகளில் இருந்து வெளிவர முடியாமல் தீவிர ஊரடங்கு உத்தரவு அமுல்படுத்தப்பட்டிருந்த நிலையில், இலங்கை மக்கள் எந்தவித வியாபார நடவடிக்கைகளும் இன்றி குறிப்பாகத் தினக்கூலியாளர்கள் எந்தவித வருமானமும் இன்றி, வாழ்ந்து கொண்டிருக்கும் போது இலங்கை அரசாங்கம் இதனை ஈடுசெய்வதற்காக ஒவ்வொரு குடும்பத்திற்கும் ரூபாய் 5000/= நிதித் தொகை வழங்கியது. நிதித் தொகையைப் பெற்றுக் கொள்வதில் பல்வேறு இடர்களையும் சிக்கல்களையும் எதிர்நோக்கியதாகவும் தெரிவித்தனர். ஆகவே அரசாங்கத்தால் வழங்கப்பட்ட நிதித்தொகையைப் பெற்றுக்கொண்டீரா? என்ற வினாவிற்கு 91% மானவர்கள் பெற்றுக் கொண்டார்கள் என்றும் 9% மானவர்கள் பெற்றுக் கொள்ளவில்லை என்றும் கூறினர்.

அவ்வாறே, தினக்கூலியாளர்களில் அதிகமானவர்களுக்கு அரசாங்கத்தால் வழங்கப்பட்ட நிதித் தொகை அன்றாட தேவைகளைப் பூர்த்திசெய்ய முடியாமல் இருந்ததாக தெரிவித்தனர். அவர்களில், 45% மானவர்கள் தேவைகளைப் பூர்த்தி செய்ய போதுமானதாக இருக்கவில்லை

என்றும் 55% மானவர்கள் ஓரளவு போதுமானதாக இருந்தது என்றும் குறிப்பிட்டனர். இவற்றை படம் 4 மற்றும் 5 விபரிக்கின்றன.





*படம் 4* அரசாங்க உதவித்தொகை




*படம் 5* உதவித்தொகை போதுமானது


அன்றாட தேவைகளைப் பூர்த்தி செய்ய அரசாங்கத்தால் வழங்கப்பட்ட பணத்தொகை உமக்கு கிடைக்கவில்லை எனின், நீர் வேறேதேனும் நிதி உதவியைப் பெற்றுக்கொண்டீரா அல்லது வேறேதேனும் நிதி உதவிகளைப் பெற முயற்சி செய்தீரா என்ற வினாவிற்குத் தினக்கூலியாளர்களில் 46%மானவர்கள் ஆம் என்றும் 54%மானவர்கள் இல்லை என்றும் பதிலளித்தார்கள்.

இந்த வகையில், நாட்டை COVID -19 எனும் வைரஸ் சூழ்ந்துகொண்டதன் காரணமாக நாட்டில் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டது. ஊரடங்கு காரணமாகத் தினக்கூலியாளர்களுக்கு வேலையின்மை ஏற்பட்டதால் பணம் பிரச்சினை ஏற்பட்டது. இதனால் வீடுகளில் வரவில்லாத இல்லாத செலவீனங்கள் அதிகரித்துக் கொண்டே சென்றன. இவ்வாறு பொருளாதார தாக்கத்தினால் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டிருந்த தினக்கூலியாளர்கள் மேலும் பல பிரச்சினைகளை எதிர்நோக்கியதை அவதானிக்க முடிந்தது. அவர்களுள் 31 பேர் Online கல்வியைத் தொடர்வதில் சிரமத்தை எதிர்நோக்கியதாக கூறினர். 32 பேர் உடல் ஆரோக்கியத்திற்குப் போதிய அளவு உணவைப் பெறுவதில் சிரமத்தை எதிர்நோக்கியதாகவும் தெரிவித்தனர். 33 பேர் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள முடியாமல் சிரமத்தை எதிர்கொண்டுள்ளனர். இவ்வாறு, ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட தினக்கூலியாளர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட பொருளாதார ரீதியான சிரமங்களை எதிர்நோக்கியிருப்பதை அவதானிக்க முடிகின்றது. இதனை படம் 6 விபரிக்கின்றது.




*படம் 6* பொருளாதார ரீதியான பிரச்சினைகள்

அவ்வாறே, ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட தினக்கூலியாளர்கள் உளவியல் தாக்கங்களுக்கும் உள்ளாகியிருப்பதை இவ்வாய்வின் மூலம் அறிந்து கொள்ள முடியுமாக இருக்கிறது. 72%மானவர்கள் தங்களினதும், தங்களது குழந்தைகளினதும் எதிர்காலம் பற்றிய யோசனை என்றும் 61%மானவர்கள் நிம்மதியின்மை, நோய் காரணமான அச்சம், என்றும் குறிப்பிட்டார்கள். மேலும் 56% மானவர்கள் எதிர்மறையான சிந்தனை என்றும் 48%, 46%, 44%மானவர்கள் முறையே சுதந்திரமின்மை, தனிமை, கோபம் போன்றவற்றைக் குறிப்பிட்டனர். இதனை படம் 7 காட்டுகிறது.





*படம் 7* பொருளாதார நெருக்கடியால் எதிர்கொண்ட பிரச்சினைகள்

மேலும் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டவர்களுடன் கலந்துரையாடும் போது, *"……இலவச மருத்துவம் உள்ள நாட்டில் பிறந்தது அதிர்ஷ்டம் தான்;. ஆனால் அதனைப் பெற்றுக் கொள்ள முடியாமல் இருப்பது துரதிஷ்டம்……"* என்று கூறினார்கள். நடமாடும் மருந்து சேவையைப் பெற்றுக்கொள்ளும் வசதியை அரசாங்கம் ஏற்படுத்தி இருந்தாலும் அதனைப் பெற்றுக் கொள்வதில் மக்கள் பாரிய சிக்கல்களையும், அலைச்சல்களையும் எதிர்நோக்கியிருக்கிறார்கள். இதனால் மருத்துவத்திற்காகச் சொந்தப் பணத்தைச் செலவிட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டதைக் கலந்துரையாடல்கள் மூலம் அறியக்கிடைத்தது.

தினக்கூலி வருமானத்தில் சிறுபகுதியைச் சேமிக்கும் வழமை பற்றி வினவப்பட்ட போது 61% ஆனவர்கள் இல்லை என்றும் 39%ஆனவர்கள் ஆம் எனவும் குறிப்பிட்டனர். அவர்களுடன் கலந்துரையாடலின் போது, *"……தினக்கூலியால் கிடைக்கும் வருமானம் அக்குறிப்பிட்ட நாளுக்கே அன்றாட தேவைகளைப் பூர்த்தி செய்ய போதாதுள்ளதால் அதில் சிறுபகுதியாவது சேமிப்பது என்பது சாத்தியமில்லை"* என்றனர். எனவே கொரோனா காலப்பகுதியில் எவ்வித சேமிப்புக்களுமின்றி அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்தி செய்ய மிகவும் சிரமப்பட்டனர் என அறிந்துகொள்ள முடிந்தது.

கொரோனா தொற்றினால் பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்டவர்களுக்கு அவர்களது குடும்பத்தினர் உதவி செய்தமை பற்றி வினவப்பட்ட போது ஓரளவு உதவிகள் கிடைக்கப்பெற்றதாக 44.5%ஆனவர்களும், உதவிகள் கிடைக்கப்பெறவில்லை என 22%ஆனவர்களும் குறிப்பிட்டனர். உதவிகள் கிடைக்கப்பெற்றதாக 33.5%ஆனவர்களும் குறிப்பிட்டிருந்தனர். இதன் மூலம் குடும்ப உறவினர்களது உதவி தினக்கூலி தொழில் செய்யும் அவர்களுக்குப் போதியளவு கிடைக்கப்பெறவில்லை என அறியமுடிகின்றது.

குடும்ப உறவினர்களது உதவி கிடைக்கப்பெறுகிறது எனக்குறிப்பிட்டவர்கள் சிலர் உலர் உணவுப்பொருட்கள், சிறு தொகை பண மூலமும் உதவிகள் கிடைத்தன என்று குறிப்பிட்டதோடு அவை அன்றாட தேவைகளைப் பூர்த்தி செய்ய மற்றும் வறுமையைப் போக்க போதாமையாகவே இருந்தது என்றனர்.



*படம் 8* நலன்புரி உதவி

அடுத்து, சாதாரண வருமானத்தைப் பெற்றுக்கொண்ட தினக்கூலியாளர்களுக்குக் கொரோனா காலப்பகுதியில் சமூக நலன்புரி அமைப்புக்களின் உதவியைப் பற்றி வினவிய போது, 48%ஆனவர்கள் உதவிகள் கிடைக்கவில்லை என்றும் 52%ஆனவர்கள் உதவிகள் கிடைத்தன என்றும் குறிப்பிட்டனர். அவ்வாறே, புதுக்கடை பிரதேச மக்களுடன் கலந்துரையாடலின் போது எவ்வித சமூக நலன்புரி அமைப்புக்கள் இப்பிரதேசத்தில் இல்லை எனவும் சிலர் குறிப்பிட்டனர். பின்வரும் படம் 8 சமூக நலன்புரி அமைப்புக்களின் உதவி பற்றி விபரிக்கின்றது.

கொரோனா தொற்றுக் காலப்பகுதிக்கு முன்னரும், கொரோனா தொற்றுக் காலப்பகுதிக்குப் பின்னரும் அவர்களது பொருளாதார ரீதியான வாழ்க்கை நிலையை அறிந்தபோது சிலர், "கொரோனாவுக்கு முன் திட்டமிடப்பட்ட வாழ்க்கை முறையையும், சுதந்திரமான வாழ்க்கை முறையையும் பேணி வந்தோம். ஆயினும் தற்போது பொருளாதாரம் மிகவும் வறுமையான வாழ்க்கை நிலையையே எதிர்நோக்குகின்றோம்" என்றும் குறிப்பிட்டனர். இன்னும் சிலர் *"…..கொரோனாவுக்கு முன் எந்தவித அச்சமுமின்றி வெளியே செல்ல முடிந்ததுடன், கல்வி மற்றும் ஏனைய நடவடிக்கைகள் குறித்த தினங்களில் எந்தவித இடையூறுமின்றி நிகழ்ந்தது. கொரோனாவின் பின்னர் இந்நிலமை முற்றிலும் மாறியுள்ளதுடன், நான் அன்றாடம் மேற்கொள்ள வேண்டிய பல வேலைகள் பிற்போடப்பட்டுள்ளது"* என்று குறிப்பிட்டனர். *"கொரோனாவுக்கு முன் தினமும் எங்காவது வேலை வாய்ப்பு இருந்தது. ஆனால்*

*தற்போது வேலைக்கு எடுப்பதற்குப் பயப்படுகின்றனர். கொரோனாவுக்கு முன்னர் சிறு சிறு கடன்களின் மூலமே வாழ்க்கை நகர்ந்தது. பின்னர் கடன் பிரச்சினையே அதிகமாக உள்ளது"* எனவும் பல விதங்களில் தமது நிலையைக் குறிப்பிட்டிருந்தனர். இந்தவகையில், நோக்கும் போது கொரோனாவிற்குப் பின்னரான காலப்பகுதியில் தினக்கூலியாளர்கள் இயல்பு வாழ்க்கை முன்பை விட மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதை இவர்களுடனான கலந்துரையாடல்கள் மூலம் அறிய முடிகின்றது.

**முடிவுரை**

கொரோனா பரவலினால் முழு உலகமுமே ஸ்தம்பிதம் அடைந்திருக்கின்ற நிலையில், அங்கு வாழும் ஒவ்வொரு சமூகப் பிரிவினரும் பல்வேறு சிரமங்களுக்கு முகங்கொடுப்பார்கள் என்பது யதார்த்தமான விடயமாகும். எனினும், செல்வந்தர்களும், நடுத்தர வர்க்கத்தினரும் தனது அன்றாட தேவையை நிறைவேற்றிக் கொள்ள முடியுமான வழிவகைகளைச் செய்துகொள்ள முடியுமாக இருக்கின்றது. ஏனெனில் இவர்களிடத்தில் பொருளாதாரம் தேவையான அளவு காணப்படுகின்றது. ஆனால், தினமும் கூலித் தொழில் செய்து அன்றாடத் தேவைகளை நிறைவு செய்பவர்கள் கொரோனா ஊரடங்கு காலப்பகுதியில் பல இடர்களுக்கு முகங்கொடுத்திருப்பார்கள் என்பதை அனுமானமாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட இவ்வாய்வானது இந்தக் கருதுகோளை உறுதிப்படுத்தும் வகையில் அதன் பெறுபேறுகள் கிடைக்கப்பெற்றிருப்பதை அவதானிக்க முடிகின்றது. இந்தவகையில், இலங்கையில் கொரோனா காலப்பகுதியில் தலைநகரான கொழும்பிலுள்ள புதுக்கடை பிரதேசத்தில் தினக்கூலி வேலை செய்பவர்களின் நிலையை இவ்வாய்வு அடையாளப்படுத்தி இருக்கின்றது. கிராமப்புறங்களில் வாழும் கூலித் தொழிலாளர்களை விட நகர்ப்புற கூலித் தொழிலாளர்கள் பல்வேறு சவால்களுக்குச் சாதாரண காலப்பகுதியில் முகங்கொடுப்பவர். குறிப்பாக, அன்றாடப் பாவனைக்குத் தேவையான பொருட்களின் விலைகளும் அதிகமாக காணப்படுதல், வாழ்க்கைச் செலவு அதிகம் போன்ற பொருளாதார பிரச்சினைகளை எதிர்கொள்வர். இதன்போது, தின வேலையும் இல்லாமல் சேமிக்கும் வழமையும் இல்லாமல் ஆகின்ற போது, அவர்களின் தினசரி வாழ்வு அதிசிரமத்துடனேயே கடந்துசெல்லும். இதேநிலையை ஆய்வுக்குட்படுத்தப்பட்ட பிரதேசத்தில் வாழ்கின்ற தினக்கூலியாளர்கள் கொரோனா ஊரடங்கு காலப்பகுதியில் எதிர்நோக்கியுள்ளனர். அவ்வாறே, குடும்ப உதவிகள், அரசாங்க உதவிகள், நிறுவனங்களின் நன்கொடைகள் வழங்கப்பட்டாலும் அவற்றைப் பெறுவதில் சிரமத்தை எதிர்கொண்டுள்ளனர் என்பதுடன் அவை போதியளவு வழங்கப்படவில்லை என்பதை அவதானிக்க முடிகின்றது.

கொரோனா தாக்கம் தொடர்பான சமூகவியல் ஆய்வுகள் பல கோணங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் இக்கால கட்டத்தில் இவ்வாய்வானது அவற்றுக்குத் துணைபுரியக் கூடியதாக அமையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. கொரோனா தாக்கத்தினால் ஏற்படுகின்ற தாக்கங்களை அடையாளப்படுத்திக்கொள்ள இவ்வாய்வு வழியமைக்கும் என்பதுடன் தினக்கூலித் தொழிலாளர்களின் வாழ்க்கை நிலையை வரையறுத்துக் கொள்ளவும் இவ்வாய்வு துணைபுரியும். குறிப்பாக நகர்புற பிரதேசங்களில் வாழும் தினக் கூலியாளர்களின் வாழ்க்கை அமைப்பை அறிந்து அதற்கேற்ப அபிவிருத்தித் திட்டங்களை ஏற்படுத்தவும் அவர்களுக்கான உதவிகளை வழங்கவும் இவ்வாய்வின் தரவுகள் துணையாக அமையும். இவ்வாய்வானது நகர்புற தினக்கூலியாளர்களை மையப்படுத்தி மேற்கொள்ளப்பட்டிருப்பது ஏனைய ஆய்வுகளில் காணப்படுகின்ற ஆய்வு இடைவெளியை கவனித்து மேற்கொள்ளப்பட்ட ஆய்வாக அமைகின்றது.

**பரிந்துரைகள்**

இவ்வாய்வின் பிரதான கண்டறிதல்களுக்கேற்ப தினக்கூலியாளர்களின் நிலையை அனர்த்த, அவசர நிலைமைகளின் போது கவனத்திற்கொள்வது நல்ல அரசாங்கத்தின் கடப்பாடாக உள்ளது. இந்தவகையில், குறித்த தலைமைகள், நிர்வாகிகள் தினக்கூலியாளர்கள் விடயத்தில் ஏனையோரை விட கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என்பது இவ்வாய்வினூடாகப் பரிந்துரைக்கப்படுகின்றது. ஏனெனில் நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் மறைமுக பங்களிப்பை அவர்கள் தினமும் வழங்கிக் கொண்டிருக்கின்றனர். அதிலும் குறிப்பாக, சர்வதேச ரீதியாகத் 'தொழிலாளர் தினம்' கொண்டாடப்படுவது தினக்கூலியாளர்களின் மதிப்பையும் பரைசாட்டுவதற்கே ஆகும்.

அடுத்து, நலன்புரி அமைப்புக்கள் இவ்வாறான அசாதாரண சூழ்நிலைகளின் போது, தேவையுள்ளவர்களுக்கு அன்பளிப்புகளை வழங்குவதற்கான முன்னேற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். குறிப்பாக, நாட்டின் அனைத்துப் பிரதேசங்களில் நலன்புரி அமைப்புக்கள் செயற்படுவது குறைவு என்பதால் நன்றாகப் பணிபுரியும் அமைப்புக்கள் தேவைக்கேற்ப உதவிகளை வழங்க வேண்டும்.

**மேற்கோள் நூல்கள் :**


1. Shahare, Padmakar & Burghate, Mukul & Sheikh, Niyaj. (2021). *The Impact and Challenges of Covid-19 Lockdown on Daily Wage Workers and their Livelihood*. 10.6084/m9.figshare.14034254.
2. Titus Lalith Antony P., Leslie Rani, Brundha M. P. & Jothi Priya. (2020). Problems Faced by Daily Labourers during COVID-19 Lockdown - A Questionnaire Survey. International *Journal of Current Research and Review*. Vol.12, Issue 19. pp.152-159.
3. Faculty of Humanities and Social Sciences. (2020). COVID-19: *The Socio-Economic Impact on Sri Lanka. Part-1: The Economic Impact of the COVID-19 Pandemic in Sri Lanka.* Matara: University of Ruhuna.
4. UNHCR & IMPACT. (2021). *Impact of COVID-19 on Daily-wage Work and the Refugee Households that Rely on it in the KR-I*, March 2021 Iraq. Accessed on: 05th May 2021. Retrieved from: https://reliefweb.int/report/iraq/impact-covid-19-daily-wage-work-and-refugee-households-rely-it-kurdistan-region-iraq-kr.
5. Hewamanne, Sandya (2021). Pandemic, Lockdown and Modern Slavery among Sri Lanka's Global Assembly Line Workers. *Journal of International Women's Studies*, 22(1), 54-69. Available at: https://vc.bridgew.edu/jiws/vol22/iss1/3.
6. Saudi Arabia's G20 Presidency. (2020). *The impact of the COVID-19 pandemic on jobs and incomes in G20 economies*. Saudi Arabia: International Labour Organization. Retrieved from: https://www.ilo.org/wcmsp5/groups/public/---dgreports/---cabinet/do
7. News.lk. (2021). *Ilaṅkaiyil korōṉā vairas toṟṟu: Iṉṟaiya nilavaram. [Corona virus pandemic in Sri Lanka: current situation]*. Retrieved from: https://tamil.news.lk/news/political-current.
8. News.lk. (2021). *Iṉṟaiya ulaka korōṉā nilavaram [Today's world corona situation]*. Retrieved from: https://tamil.news.lk/news/world/item/40672-2021.

9. Wimalaweera, A .. (2020). Covid 19 & Beyond- *The impact on the Labour Market of Sri Lanka, Survey Report of The E-Survey Conducted on Private Sector Establishments –May 2020*. Sri Lanka: Department Of Labour.
10. Pradas Supramaniyam. (2020). *Korōṉā vairas ilaṅkaiyil tōṟṟuvittirukkum poruḷātāra vīḻcci| oru pārvai [The economic downturn caused by the corona virus in Sri Lanka-a view]*. Retrieved from: https://www.google.com/amp/s/roar.media/tamil/main/trending
11. World Bank. (2020). *Korōṉāvāl ilaṅkai etirnōkka uḷḷa piracciṉai- ulaka vaṅki aṟivippu [Issue facing Sri Lanka by Corona- World Bank announcement]*. Retrieved from: https://www.google.com /amp/s/www.tamilwin.com eco.
12. Anudinan Sudanthiranathan. (2020). *Korōṉā kālamum varumāṉattiṟku mīṟiya celavīṉaṅkaḷum. [Corona Period and expenses over income]*. Retrieved from: http://www.tamilmirror.lk.